2023 ஏப்ரல் 21] [திரு. தா.மோ. அன்பரசன்]

செய்யப்பட வேண்டுமென்றபட்சத்தில், 5 மடங்கு கட்டணம் விதிக்கப்பட்டிருந்ததை எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் தொடர்ந்த வழக்கில், இடைக்கால தடை விதித்து நீதிமன்றம் ஆணை வழங்கியுள்ளது. மேலும், ஒன்றிய அரசின் தாவரப் பாதுகாப்பு இயக்குநரக அலுவலகத்தின் குறிப்பாணை, 12-7-2022-ன்படி, குஜராத் உயர் நீதிமன்ற தீர்ப்பாணை வழங்கப்பட்ட, 28-6-2022 முதல் 5 மடங்கு கூடுதல் கட்டணம் வசூலிக்க வேண்டாமென அறிவுறுத்தியிருக்கிறது. இதன்மூலம் தமிழ்நாடு உற்பத்தியாளர்களுடைய வாழ்வாதாரத்தை கவனத்தில் கொண்டு, தகுந்த நடவடிக்கைகளை நம்முடைய அரசு எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

(அஏ) கன்னியாகுமரி மாவட்டம், பன்றியைக் கொன்றதாக 3 வழக்கறிஞர்கள் கைது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் நேற்றைய தினம் 3 வழக்கறிஞர்கள் தங்களுடைய சொந்த* estate-*க்குச் சென்றபோது, அங்கே இருக்கக்கூடிய தெரியாத நபர் ஒருவர் ஒரு பன்றியைக் கொன்றுவிட்டார். ஆனால், பன்றியைக் கொன்றவரை விட்டுவிட்டு, 3 வழக்கறிஞர்களையும் கைது செய்து,* forest *அலுவலகத்தில் ஒரு நாள் முழுவதும் வைத்திருக்கிறார்கள். எனவே, . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசின் கவனத்திற்கு வந்துவிட்டது.* Arrest *செய்துவிட்டார்கள் என்று சொல்லிவிட்டீர்கள்.*

(அஐ) வீட்டு வசதி வாரிய குடியிருப்புதாரர்களுக்கு உரிமைப் பத்திரங்கள் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன்* K. *அர்ச்சுணன் அவர்கள்.*

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் வீட்டு வசதி வாரியத்தால் 24,000 வீட்டுமனைகளும், வீடுகளும் ஒதுக்கப்பட்டன. முழுமையாக*